www.ecourtsindia.com

**சிறப்பு மாவட்ட நீதிமன்றம் எண்.II**
**மோட்டார் வாகன விபத்து வழக்கு கோருரிமை தீர்ப்பாயம், கடலூர்.**
**MCOP.No.2073 Of 2006**

| | | |
|---|---|---|
| **Witness Rank** | **:** | PW1 |
| **Name of the Witness** | **:** | கார்த்திக் |
| **Father's Name** | **:** | ராமலிங்கம் |
| **Age** | **:** | 21 |
| **Occupation** | **:** | |
| **Address** | **:** | |

Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act, 1969 (Act 44 of 1969) on the 3rd day of March, 2025.

**முதல் விசாரணை தொடர்ச்சி:-**

நான் மனுவில் மனுதாரர் ஆவேன். அந்த வகையில் இந்த வழக்கினை பற்றி எனக்கு நேரடியாக தெரியும். இவ்வழக்கில் எனது சாட்சியத்தை கூடுதல் சத்தியப்பிரமாண வாக்குமூலமாக கணிப்பொறி அச்சு செய்து கணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அதன் விவரங்களை என் வழக்கறிஞர் விளக்கி கூறினார். அதன் விவரத்தை தெரிந்து கொண்ட பிறகு நான் சத்தியபிரமாண வாக்குமூலத்தில் கையொப்பம் செய்தேன். அதனை எனது சாட்சியத்தின் ஒரு பகுதியாக கருதிட வேண்டுகின்றேன். எனது சாட்சியத்தை உறுதியூட்ட கீழ்கண்ட ஆவணங்களை சமர்ப்பிக்கின்றேன்.

| | | |
|---|---|---|
| 10. | 1ம் எதிர்மனுதாரரின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை நகல் | **Ex.P10** |
| 11. | மனுதாரரின் ஆதார் அட்டை நகல் | **Ex.P11** |
| 12. | மனுதாரரின் வங்கி புத்தக நகல் | **Ex.P12** |

மனுப்படி தீர்பாக வேண்டுகின்றேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை-**

எனது வயது, வருமானம் மற்றும் தொழில் தொடர்பாக ஆவணங்கள் தாக்கல்

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNCD270129042023/truecopy/order-1.pdf

www.ecourtsindia.com

செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்து எனது தகப்பனாரின் அஜாக்கிரதையால் நடைபெற்றதாலும் சாலையை விதிகளுக்கு மாறாக என் தகப்பனார் வாகனத்தை இயக்கியதால் விபத்து ஏற்பட்டது என்றும், எனக்கு ஏற்பட்ட காயங்கள் குணமாகிவிட்டதாலும், நிரந்தர ஊனம் எதும் இல்லை என்பதாலும் எனக்கு எந்த மருத்துவ செலவுகளும் ஏற்படாததாலும் எனக்கு வருமான இழப்பு ஏற்படவில்லை என்பதாலும், 2 ம் எதிர்மனுதாரர் இழப்பீடு தர அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் சொற்ப காயங்கள் என்றும் வலி, வேதனை, நிரந்தர ஊனம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயம் எனது வருவாய் ஈட்டும் தன்மையையும் எனது இயல்பு வாழ்க்கையும் எவ்விதத்திலும் பாதிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்தில் நான் இளவர் என்றால் சரிதான். நான் இளவராக இருந்தபோது காயங்கள் ஏற்பட்டது என்றும் அது தற்போது முழுமையாக குணமாகிவிட்டது என்று சொன்னால் சரியல்ல. இதர செலவினங்கள் தொடர்பாக நான் கோரியுள்ள தொகை ஆதாரமற்றது என்று சொன்னால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு மிக அதிகம் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை -</u>** இல்லை

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/ her to be Correct.*

*Spl. District Judge, No.II*
*Spl. District Court No. II*
*to deal with MCOP Cases,*
*Cuddalore.*

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNCD270129042023/truecopy/order-1.pdf

www.ecourtsindia.com
www.ecourtsindia.com
www.ecourtsindia.com
www.ecourtsindia.com
www.ecourtsindia.com
www.ecourtsindia.com

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNCD270129042023/truecopy/order-1.pdf